**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No. 172/2021</u>**

**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சொர்ணம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | திருமலை | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வல்லராமபுரம் | வயது | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 10th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வல்லராமபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி பொட்டுத்தாய் என்னுடைய தம்பி மனைவி. எனக்கு தேதி, மாதம் எதுவும் ஞாபகமில்லை. நான் ஒரு நாள் கிணற்றுக்கு போகும் வழியில் பொட்டுத்தாயை எதிரிகள் அடித்து கிடத்தினார்கள். மாரியப்பன் கம்பு வைத்து கை விரலில் அடித்தார். எனக்கு வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விாசரணையிலும் சொல்லியுள்ளேன். போலீசார் என்னை விசாரித்ததை வாக்குமூலமாக எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர். 1 ம் எதிரி மாரியப்பன், 2 வது சாட்சி வேலு சகோதரர்கள் என்றால் சரிதான். சொத்து பாகப்பிரிவினை சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் குடியிருக்கும் வீட்டிலிருந்து 5, 6 வீடுகள் தள்ளி நான் குடியிருந்து வருகிறேன். நான் கிணற்றுக்கு

போகும்போது, சம்பவம் நடந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். பொட்டுத்தாயை மாரியப்பன் கம்பால் கை விரலில் அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவயிடத்தை சுற்றிலும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் சம்பவத்தை பார்க்கவில்லை. நான் தடுக்க முயற்சி செய்தேனா? என்றால் அதற்கு வழி இல்லை. எதிரி மாரியப்பனுடன் நான் சிறுவயதிலிருந்தே பேச்சு - வார்த்தை இல்லை. எதிரிகளுக்கும், எங்களுக்கும் 20 வருடங்களாக பல வழக்குகள் உள்ளது. அந்த வழக்குகளில் நான் சம்பவத்தை பார்த்ததாக சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதே சம்பவத்தில் பொட்டுத்தாய், வேலு ஆகியோர்கள் எதிரிகளை தாக்கியதாக ஒரு வழக்கு சி.சி.32/2022 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிரியின் மேல் சிறுவயதில் இருந்த பகை காரணமாக வேலு என்னுடைய சகோதரர் என்பதினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.11 18:13:23 +0530